## மார்ச் - 14 - செவ்வாய்
### புனித மெற்றில்டா

**நீங்களோ ஒழுங்குமுறையை வெறுக்கின்றீர்கள்: என் கட்டளைகளைத் தூக்கியெறிந்து விடுகின்றீர்கள்: திபா. 50:17**

---

**முதல் வாசகம்: ஏசாயா 1: 1 – 10, 16 – 20**

உசியா, யோத்தாம், ஆகாசு, எசேக்கியா என்போர் யூதா நாட்டின் அரசர்களாய் இருந்த காலத்தில் யூதா, எருசலேம் என்பவற்றைக் குறித்து ஆமோட்சின் மகன் எசாயா கண்ட காட்சி: விண்வெளியே கேள் மண்ணுலகே செவிகொடு ஆண்டவர் திருவாய் மலர்ந்தருளுகின்றார் பிள்ளைகளைப் பேணி வளர்த்தேன் அவர்களோ எனக்கெதிராகக் கிளர்ந்தெழுந்தார்கள். காளை தன் உடைமையாளனை அறிந்து கொள்கின்றது. கழுதை தன் தலைவன் தனக்குத் தீனி போடும் இடத்தைத் தெரிந்து கொள்கின்றது. ஆனால் இஸ்ரயேலோ என்னை அறிந்து கொள்ளவில்லை. என் மக்களோ என்னைப்புரிந்து கொள்ள வில்லை. ஐயோ, பாவம் நிறைந்த மக்களினம் இது. அநீதி செய்வோரின் கூட்டம் இது தீச்செயல் புரிவோரின் வழிமரபு இது. கேடுகெட்ட மக்கள் இவர்கள் ஆண்டவரைப் புறக்கணித்து விட்டார்கள் இஸ்ரயேலின் தூயவரை அவமதித்துவிட்டார்கள். அவருக்கு அன்னியராய் ஆகிவிட்டார்கள். நீங்கள் ஏன் தொடர்ந்து வன்முறையில் ஈடுபடுகிறீர்கள்? என் கையால் பட்ட அடி போதாதா? உங்கள் தலையெல்லாம் வடுக்கள். இதயமெல்லாம் தளர்ச்சி. உள்ளங்கால் முதல் உச்சந்தலை வரை உங்கள் உடலில் நலமே இல்லை. ஆனால் காயங்கள், கன்றிப்போன வடுக்கள், சீழ்வடியும் புண்களே நிறைந்துள்ளன. அங்கே சீழ் பிதுக்கப்படவில்லை, கட்டு போடப்படவில்லை, எண்ணெய் பூசிப் புண் ஆற்றப்படவுமில்லை. உங்கள் நாடு பாழடைந்து கிடக்கிறது. உங்கள் நகரங்கள் நெருப்புக்கு இரையாயின. வேற்று நாட்டினர் உங்கள் கண்ணெதிரே உங்கள் நாட்டை விழுங்குகிறார்கள் வேற்று நாட்டினரால் வீழ்த்தப்பட்ட உங்கள் நாடு பாழடைந்து கிடக்கிறது. மகள் சீயோன் திராட்சைத் தோட்டத்துக் குடில் போன்றும் வெள்ளரித் தோட்டத்துக் குடிசை போன்றும் முற்றுகை யிடப்பட்ட நகரம் போன்றும் கைவிடப்பட்டாள். படைகளின் ஆண்டவர் நம்மில் சிலரையேனும் எஞ்சியிருக்கச் செய்யாவிடில் சோதோமைப்போல் நாம் ஆகியிருப்போம். கொமோராவுக்கு ஒத்தவர்களாயிருப்போம். எருசலேமே, உன்னை ஆளுகிறவர்களும் உன் மக்களும், சோதோம் கொமோராவைப் போன்றவர்களா யிருக்கின்றனர் நம் ஆண்டவரின் அறிவுரையைக் கேளுங்கள் அவர்தம் கட்டளைக்குச் செவிசாயுங்கள். உங்களைக் கழுவித் தூய்மைப்படுத்துங்கள் உங்கள் தீச்செயலை என் திருமுன்னிருந்து அகற்றுங்கள் தீமை செய்தலை விட்டொழியுங்கள். நன்மை செய்யக் கற்றுக்கொள்ளுங்கள் நீதியை நாடித் தேடுங்கள் ஒடுக்கப்பட்டோருக்கு உதவி செய்யுங்கள் திக்கற்றோருக்கு நீதி வழங்குங்கள் கைம் பெண்ணுக்காக வழக்காடுங்கள். ”வாருங்கள், இப்பொழுது நாம் வழக்காடுவோம்” என்கிறார் ஆண்டவர் ”உங்கள் பாவங்கள் கடுஞ்சிவப்பாய் இருக்கின்றன் எனினும் உறைந்த பனிபோல அவை வெண்மையாகும். இரத்த நிறமாய் அவை சிவந்திருக்கின்றன் எனினும் பஞ்சைப்போல் அவை வெண்மை யாகும். மனமுவந்து நீங்கள் எனக்கு இணங்கி நடந்தால் நாட்டின் நற்கனிகளை உண்பீர்கள். மாறாக, இணங்க மறுத்து எனக்கெதிராகக் கிளர்ந்தெழுந்தால், திண்ணமாய் வாளுக்கு இரையாவீர்கள் ஏனெனில் ஆண்டவர்தாமே இதைக் கூறினார்.

**பதில்பாடல்:** தம் வழியைச் செம்மைப்படுத்துவோர் கடவுளின் மீட்பைக் கண்டடைவர்

**நற்செய்தி: மத்தேயு 23 : 1 – 12**

அக்காலத்தில் இயேசு மக்கள் கூட்டத்தையும் தம் சீடரையும் பார்த்துக் கூறியது: ”மறைநூல் அறிஞரும் பரிசேயரும் மோசேயின் அதிகாரத்தைக் கொண்டிருக்கின்றனர். ஆகவே அவர்கள் என்னென்ன செய்யும்படி உங்களிடம் கூறுகிறார்களோ அவற்றையெல்லாம் கடைப்பிடித்து நடந்து வாருங்கள். ஆனால் அவர்கள் செய்வதுபோல நீங்கள் செய்யாதீர்கள். ஏனெனில் அவர்கள் சொல்வார்கள் செயலில் காட்டமாட்டார்கள். சுமத்தற்கரிய பளுவான சுமைகளைக் கட்டி மக்களின் தோளில் அவர்கள் வைக்கிறார்கள் ஆனால் அவர்கள் தங்கள் விரலால் தொட்டு அசைக்கக் கூட முன்வரமாட்டார்கள். தாங்கள் செய்வதெல்லாம் மக்கள் பார்க்க வேண்டும் என்றே அவர்கள் செய்கிறார்கள் தங்கள் மறைநூல் வாசகப் பட்டைகளை அகலமாக்குகிறார்கள் அங்கியின் குஞ்சங்களைப் பெரிதாக்குகிறார்கள். விருந்துகளில் முதன்மையான இடங்களையும் தொழுகைக் கூடங்களில் முதன்மையான இருக்கைகளையும் விரும்புகின்றார்கள் சந்தைவெளிகளில் மக்கள் தங்களுக்கு வணக்கம் செலுத்துவதையும் ரபி என அழைப்பதையும் விரும்புகிறார்கள். ஆனால் நீங்கள் ”ரபி” என அழைக்கப்பட வேண்டாம். ஏனெனில் உங்களுக்குப் போதகர் ஒருவரே. நீங்கள் யாவரும் சகோதரர், சகோதரிகள். இம்மண்ணுலகில் உள்ள எவரையும் தந்தை என நீங்கள் அழைக்க வேண்டாம். ஏனெனில் உங்கள் தந்தை ஒருவரே. அவர் விண்ணகத்தில் இருக்கிறார். நீங்கள் ஆசிரியர் எனவும் அழைக்கப்பட வேண்டாம். ஏனெனில் கிறிஸ்து ஒருவரே உங்கள் ஆசிரியர். உங்களுள் பெரியவர் உங்களுக்குத் தொண்டராக இருக்க வேண்டும். தம்மைத்தாமே உயர்த்துகிறவர் எவரும் தாழ்த்தப்பெறுவர். தம்மைத்தாமே தாழ்த்துகிறவர் எவரும் உயர்த்தப்பெறுவர்.

**தியானம்:** இன்று தவக்காலத்தின் 2ம் வாரத்தில் காலடி எடுத்துவைத்துள்ளோம் இக்காலக்களிலே எமது வாழ்வானது முற்றுமுழுதாக மாற்றமடையும் காலமாகும். எம்மை பாவங்களிலிந்து மீட்க இம்மண்ணுலகிற்கு வந்த இறைமகன் இயேசுவை ஏற்றுக்கொண்டு வெளிவேடமற்ற வாழ்க்கை வாழாது, உண்மை வாழ்வு வாழவேண்டுமென்று இன்றைய தியான வாசகங்கள் தெரிவிக்கின்றன. அன்று பரிசேயரும், மறைநூல் அறிஞரும் இயேசுவில் குற்றம் கண்டுபிடிக்க முயல்கின்றார்கள். ஆனால் இயேசுவோ அவர்களின் தூய்மையற்ற உள்ளத்தை அறிந்தவராய் “வெளிவேடக்காரரே உங்களுக்கு ஐயோ கேடு” என்று கடிந்தவராய் தூய்மையான உள்ளத்தினை அர்ப்பணிக்கும் படியும் அப்பொழுது நீங்கள் தூய்மையாவீர்கள் என்றும் கூறுகின்றார். இன்று எங்கள் ஒவ்வோருவரையும் பார்த்து நீங்கள் வெளிவேடமற்றவர்களாக தூய்மையான உள்ளத்தினை எனக்கு அர்ப்பணியுங்கள் அவ்வுள்ளமானது நான் வந்து தங்கும் ஆலயம் என்று கேட்கின்றார். “நான் எரிபலிகளை, காட்டுவிலங்குகளை காணிக்கையாகக் கேட்கவில்லையாவும் என்னுடயவையே” (தி.பா.50:9,10). எனவே இக்காலங்களில் எம் உளளத்திலுள்ள அனைத்து தீய துர்க்குணங்களை நீக்கியவர்களாய் வெளிவேடமற்ற வாழ்க்கை வாழ்ந்து இயேவை எம் உள்ளத்தில் ஏற்றுக்கொள்ள எங்களைத் தயார்படுத்துவோம்.